# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

## OS. No. 135/2018 நாள்.09.03.2026

## DW2- திருமதி.சுசீலா, க/பெ. திரு.கிள்ளிவளவன்

1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை

1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு சொத்து தருவதில் எனக்கு ஆட்சேபணை இல்லை என்றால் பூர்விக சொத்தில் வேண்டுமானால் கொடுக்கலாம்.

6, 7, 8 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.

வாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை

வழக்கு தாக்கல் செய்தபோது விபரம் நான்தான் சொன்னேன் என்றால் ஆமாம். நீதிமன்றத்தில் சாட்சி சொல்வதற்கு பிரமாணபத்திரம் தாக்கல்செய்ய நான்தான் விபரம் சொன்னேன் என்றால் ஆமாம். என் பிரமாண பத்திரத்தில் துரைமாணிக்கம், பெரியநாயகி தம்பதியருக்கு ஒரு ஆண்குழந்தையும், ஒரு பெண்குழந்தையும் பிறந்து இறந்துவிட்டது என்று சொல்லியுள்ளேனே அதை எதிர்வழக்குரையில் சொன்னேனா என்றால் இல்லை. இளந்திரையன் என்பவர் தாவா சொத்து முன்பாக ஒருகடை வைத்திருந்தார் என்று சொல்லியுள்ளேனே அந்த விபரத்தை எதிர்வழக்குரையில் சொல்லவில்லை என்றால் ஆமாம். என் கணவர் கிள்ளிவளவன் புனல்வாசல் கிராமத்தில் விவசாயம் செய்தார் என்று எதிர்வழக்குரையில் சொல்லவில்லை என்றால் ஆமாம். எனக்கு 1985இல் திருமணம் நடந்தது என்றால் ஆமாம். அதனால் தாவா சொத்தை என் மாமனார் துரைமாணிக்கம் எதன் வகையில் எப்படி கிரையம் வாங்கினார் என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் ஆமாம். அவர் கும்பகோணத்தில் தமிழ் ஆசிரியர் பணிதவிர வேறு பணி எதுவும் செய்யவில்லை என்றால் ஆமாம். வழக்கில் 5ஆம் பிரதிவாதி சித்திரபாவை நான் தத்துஎடுக்கபட்ட பெண் என்றால் ஆமாம். தத்து தொடர்பான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். வழக்கில் எத்தனை அயிட்ட சேர்க்கபட்டுள்ளது என்றால் கும்பகோணவீடு மட்டும். புனல்வாசலில் உள்ள சொத்து இந்த வழக்கில் சேர்க்கப்படவில்லை என்றால் ஆமாம். என் கொழுந்தனார் ரவிவர்மன் கால்நடைதுறையில் மருத்துவராக இருந்துஇறந்துவிட்டார் என்றால் ஆமாம். அவரை படிக்க வைத்தது என் மாமனார் என்றால் ஆமாம், நிலத்தை விற்று படிக்கவைத்தார். ரவிவர்மன் தனியாக கும்பகோணத்தில் வீடு கட்டி இருந்தார் என்றால் ஆமாம். என் கணவர் எதுவும் படிக்கவில்லை என்றும் வேலைக்கும் போகவில்லை என்று சொன்னால் ஆமாம். என் கணவருக்கும், இளந்திரையனுக்கும் அடிக்கடி தகராறு ஏற்பட்டு காவல்நிலையத்தில் புகார்

கொடுப்பார்கள் என்றால் ஆமாம். என் கணவருக்கும் என் மாமனாருக்கும் இடையில் தகராறு ஏற்பட்டு காவல்நிலையத்தில் புகார் உள்ளது என்றால் இல்லை. எந்த வருடம் ரவிவர்மன் இறந்தார் என்றால் 1991. இறந்தபிறகு 10ஆம் நாள் கருமாதி என்றால் ஆமாம். அந்த கருமாதி அன்று நிலம் தொடர்பாக பஞ்சாயத்து நடந்ததா என்றால் இல்லை தெரியாது. துரைமாணிக்கம் எவ்வளவு சம்பளம் பெற்றார் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் ஆமாம். வழக்கில் 1990லிருந்து 2017 வரைக்கும் உண்டான தாவா சொத்திற்கான வரி நீதிமன்றத்தில் என் பெயரிலோ, என் கணவர் பெயரிலோ ரசீது தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அதைபோல் மின்கட்டணம் ரசீதுகள் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. எங்கள் குடும்ப உறுப்பினர்களிடம் எவ்வளவு வருடமாக பேசுவதில்லை என்றால் 20 வருடமாக. என் மாமியார் பெரியநாயகி எந்த ஆண்டு இறந்தார் என்றால் 2010. அவர் இறப்பதற்கு முன்பாக நானும் என் கணவரும் தனியாக போய்விட்டோம் என்றால் கொழுந்தனார் மணிமொழி மாமியாரை அவர் வீட்டிற்கு அழைத்துபோய்விட்டார். 2018 வழக்கு போட்டதற்கு பின்பாக நானும், 5 ஆம் பிரதிவாதியும் கும்பகோண வீட்டை மற்றும் 6, 7 பிரதிவாதிகளுக்கு கிரையம் செய்துகொடுத்துள்ளோம் என்றால் ஆமாம். மணிமொழிக்கு புனல்வாசல் கிராமத்தில் எப்படி சொத்து கிடைத்தது என்றால் பூர்விக சொத்து. மணிமொழிக்கு எப்படி கிடைத்தது என்றால் தெரியாது. வழக்கு நிலுவையில் இருக்கும்போது சொத்தை விற்ககூடாது என்று பேப்பர் விளம்பரம் 5.11.2018 இல் கொடுத்தார்கள் என்றால் தெரியாது. நான் திருமணமாகி கூட்டுகுடும்பமாக மாமனாருடன் எல்லாரும் வசித்தோம் என்றால் ஆமாம் 1985 இல் திருமணம்,1987 இல் எல்லோரும் தனிகுடித்தனம். 1987 இல் கண்ணனுக்கு திருமணமாகிவிட்டதா என்றால் இல்லை அப்போதுதான் வேலை கிடைத்தது. கொழுந்தனார் இளந்திரையன் என்பவருக்கு காதுகேட்காது என்றால் ஆமாம். வழக்கு நிலுவை காலத்தில கோவிந்தராஜன் என்பவருக்கு பொது அதிகாரம் கொடுத்திருந்தேன் என்றால் ஆமாம். அந்த கால கட்டத்தில் வாதிகள் சொத்தை விற்ககூடாது என்று மனு போட்டிருந்தார் என்றால் தெரியாது. அந்த மனுவில் என் வழக்கறிஞர் சொத்தை விற்கமாட்டோம் என்று மேற்குறிப்பு செய்தார் என்றால் இல்லை. நீதிமன்றத்தில் மேற்குறிப்பு செய்யபட்டது என்றும் நான் அதை தெரிந்துகொண்டு உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 9.11.2017 இல் எனது கணவர் எனக்கு செட்டில்மெண்ட் பத்திரம் எழுதிகொடுத்தார் என்றால் ஆமாம். அது **வா.சா.ஆ. 13** ஆகும். பவர் பத்திரம் **வா.சா.ஆ. 14** ஆகும். சொத்து விற்ற பத்திரம் **வா.சா.ஆ.15** ஆகும். எங்கள் பகுதியில் வாண்டையார் என்பவரும் , வைத்தியர் என்பவரும் வேறவேற என்றால் ஆமாம். மணிமொழி திருவையாறு நீதிமன்றத்தில் என் கணவருக்கு எதிராக அசல்

வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்றால் ஆமாம். அந்த அசல் வழக்கில் எந்த சொத்து தொடர்பாக பரிகாரம் கோரியிருந்தார் என்றால் தெரியாது. அந்த வழக்கில் என் கணவர் எதிர்வழக்குரை தாக்கல் செய்திருந்தார் என்றால் ஆமாம். அதுதான் பி.சா.ஆ.4 என்றால் ஆமாம். அந்த வழக்கில் உள்ள சொத்து தாவா சொத்து அல்ல என்றால் ஆமாம். இளந்திரையன் என் கணவர் மீது கும்பகோணம் நீதிமன்றத்தில் தாக்கல்செய்தார் என்றால் ஆமாம். அது எந்த சொத்தை பற்றி என்றால் கும்பகோணம் வீடுதான். குடும்ப ஏற்பாட்டில் அவருக்கு ஒதுக்கபட்ட சொத்தை மட்டும் சொல்லியுள்ளார் என்றால் ஆமாம். பி.சா.ஆ.8 எனக்கு எப்போது தெரியவந்தது என்றால் என் மாமனார் இறந்து 30 நாள் கழித்து சாமி கும்பிடும்போது சீனிவாச வைத்தியர் வந்து சொன்னார். யாரிடம் சொன்னார் என்றால் என் கணவரிடம் சொன்னார். உயில் என்றைக்கு எங்களிடம் கிடைத்தது என்றால் தேதி ஞாபகமில்லை. யார் இந்த உயிலை சார்பதிவாளர் அலுவலகத்திலிருந்து வாங்கினார் என்றால் என் கணவர் வாங்கினார். உயிலில் யார் யார் சாட்சி கையெழுத்து என்றால் சீனிவாச வைத்தியர், சுவாமிமலையில் இருந்து என் கணவரின் நண்பர் ஒருவர். அவர்கள் இருக்கிறார்களா என்றால் இறந்துவிட்டார்கள். உயிலை என் கணவரை தவிர வேறுயாரும் உடன் சென்று மனு கொடுத்து பெறவில்லை என்றால் ஆமாம். உயில் எப்போது நடைமுறைக்கு வந்தது என்றால் 30நாள் கழித்து வந்தது.உயிலின் அசல் எங்குள்ளது என்றால் சொத்தை விற்றதால் வாங்கிய டாக்டர் நீலாவதியிடம் கொடுத்துள்ளேன். வா.சா.ஆ.2 ஆவணத்தில் என் மாமனார் கையெழுத்து உள்ளதா என்றால் அதுமாதிரி தெரியவில்லை. என் மாமனாருக்கு சந்திரசேகர் என்பவர் நண்பர் என்றால் இல்லை தம்பி மகன். வா.சா.ஆ.2 ஆவணத்தில் உள்ள கையெழுத்து என் கணவருடையது என்றால் அதுமாதிரிதான் உள்ளது ஆனால் அவர் போடவில்லை. என் கணவர் கிள்ளிவளவனின் துண்டுதலினால் எனது மாமனார் உயில் எழுதிவைத்துள்ளார் என்றால் சரியல்ல. குடும்ப உறுப்பினர்கள் உறவினர்கள் முன்னிலையில் குடும்ப ஏற்பாடு என்றால் சரியல்ல. எனக்கும் 5ஆம் பிரதிவாதிக்கும் என் கணவர் எழுதி வைத்த செட்டில்மெணட் ஏற்புடைதல்ல என்றால் சரியல்ல. வழக்கு நிலுவையில் இருக்கும் காலத்தில் 6, 7 பிரதிவாதிகளுக்கு சொத்தை விற்றது சரியல்ல என்றால் சரியல்ல.

**நான் சொல்ல என் உத்திரவுப்படி**
**தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,**
**மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்**
**காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று**
**ஒப்புக்கொள்ளப்பட்டது.**

NAGARAJAN Digitally signed by NAGARAJAN Date: 2026.03.09 18:53:00 +0530

**2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**தஞ்சாவூர்.**